இன்றைய வேளாண் செய்திகள்

07.12.2012 P.M

08.12.2012 A.M

## டிச. 11-ல் காய்கறி பயிர் சாகுபடி பயிற்சி

ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் கத்தரி, வெண்டை, மிளகாய், பூசணி பயிர்களை சாகுபடி செய்வதற்கான பயிற்சி டிசம்பர் 11-ம் தேதி நடைபெறவுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கத்தரி 949 ஹெக்டேர், மிளகாய் 596 ஹெக்டேர், வெண்டை 927 ஹெக்டேர், பூசணி 42 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்படுகிறது.

சரியான அளவு நுண்ணூட்டச் சத்தை சரியான நேரத்தில் பயிர்களுக்கு கொடுக்கும் போது, அவற்றின் மகசூல் மற்றும் தரம் அதிகரிக்கும்.

இதை சரியாக செய்யாததாலும், கத்தரியில் காய்ப் புழுக்களும், வெண்டையில் மஞ்சள் தேமல் நோய், மிளகாயில் பிஞ்சு உதிர்வு போன்றவற்றாலும் மகசூல் பெருமளவில் குறைகிறது.

இதுகுறித்து வம்பன் வேளாண் நிலையத்தில் நடைபெறும் பயிற்சியில் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் கலந்துகொள்ளலாம். கூடுதல் தகவலுக்கு 8489234627, 04322 290321 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

## திருந்திய நெல் சாகுபடி செய்தவர்களுக்கு மானியம்

மன்னார்குடி வட்டாரத்தில் வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் முறையாக திருந்திய நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டு வருவதாக வேளாண்மை உதவி இயக்குநர் ஆ. உத்திராபதி வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இத் திட்டத்தில் இணைந்துள்ள விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.3 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. இதில் ரூ.ஆயிரம் இடுபொருள்களாகவும், மீதம் தொகை அந்தந்த விவசாயிகளின் வங்கிக் கணக்கில் சேர்க்கப்படும் என்றும், இடுபொருளை அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி பெற்றுக் கொள்ளளாம், என்றும் அவர் தெரிவித்தார்.

## காட்டுப் பன்றிகளால் பயிர் சேதம் : விவசாயிகள் புகார்

சின்னமனூர் அருகே சுக்காங்கல்பட்டி பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் காட்டுப் பன்றிகளால் பயிர்கள் சேதமடைந்ததை அடுத்து, நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் புகார்

தெரிவித்துள்ளனர்.

சுக்காங்கல்பட்டி, ஓடைப்பட்டி ஆகிய பகுதிகளில் வனத் துறைக்குச் சொந்தமான முல்லை வனக் கரடு அடிவாரத்தில் 100 ஏக்கர் பரப்பளவில் விவசாய நிலங்கள் உள்ளன. இந்த நிலங்களில் மக்காச்சோளம், வாழை மற்றும் திராட்சை சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், முல்லை வனக் கரடு பகுதியில் இருந்து இரவில் காட்டுப் பன்றிகள் விவசாய நிலங்களுக்குள் புகுந்து பயிர்களைச் சேதப்படுத்தி வருகின்றன. கடந்த சில நாள்களில் மட்டும் ரூ. 5 லட்சம் மதிப்பிலான மக்காச்சோளம் மற்றும் வாழை சேதமடைந்துள்ளதாக, விவசாயிகள் புகார் கூறியுள்ளனர்.

காட்டுப் பன்றிகளிடம் இருந்து விவசாயப் பயிர்களை காப்பதற்கு, முல்லை வனக் கரடு பகுதி எல்லையில் சோலார் வேலி மற்றும் தடுப்புச் சுவர் அமைக்க நடவடிக்கை எடுக்கக் கோரி, சின்னமனூர் வனத் துறை அலுவலர்களிடம் விவசாயிகள் சார்பில் மனு அளிக்கப்பட்டுள்ளது.

## பால் கொள்முதல் தொடக்க விழா

எல்லாபுரம் ஒன்றியம் பேரண்டூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் பால் கொள்முதல் துவக்க விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

÷திருவள்ளூர் மாவட்ட பால்வள துணைப் பதிவாளர் பிவி.ராதாகிருஷ்ணன் சிறப்புரை ஆற்றினார்.

சங்கத் தலைவர் தேவதாஸ் வரவேற்றார். பேரண்டூர் ஊராட்சித் தலைவர் எம்.சேகர் பால் கொள்முதலை தொடங்கி வைத்தார். தொடக்கத்தில் 200 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

கால்நடை மருத்துவர் டாக்டர் கார்த்தியாயினி, சங்க நிர்வாகிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## விதை கிராம திட்டப் பயிற்சி

உளுந்தூர்பேட்டை வட்டார வேளாண்மைத் துறை சார்பில் விதை கிராமத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்குப் பயிற்சி முகாம் ஆர்.ஆர்.குப்பம் கிராமத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஊராட்சி மன்றத் தலைவர் பி.கலியபெருமாள் தலைமை வகித்தார். துணைத் தலைவர் பீ.பாலு முன்னிலை வகித்தார். வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தும் திட்டங்கள், நெல்லில் அதிக மகசூல் பெறும் தொழில் நுட்பங்கள் குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் கருணாநிதி விளக்கிக் கூறினார்.

ஆத்மா திட்டம் குறித்து விதைச் சான்று அலுவலர் சந்துரு, உதவி வேளாண்மை அலுவலர் வீ.அந்தோணிசாமி, திருந்திய நெல் சாகுபடி குறித்து முத்துலட்சுமி ஆகியோர் எடுத்துக் கூறினர்.

திருநாவலூர்: திருநாவலூர் வட்டார வேளாண்மைத்துறை சார்பில் ஈஸ்வரக்கண்டநல்லூரில் விதை கிராம திட்ட பயிற்சி அண்மையில் நடைபெற்றது. ஊராட்சி மன்றத் தலைவர் கே.முருகன், ஒன்றிய கவுன்சிலர் வரதமலை ஆகியோர் முன்னிலை வகித்தனர். உதவி விதை அலுவலர் ரா.பன்னீர்செல்வம் வரவேற்றார். வேளாண்மை உதவி இயக்குநர் பா.தேவநாதன் தலைமை வகித்து நவீன தொழில்நுட்பங்கள், திருந்திய நெல் சாகுபடி குறித்து விளக்கி பேசினார்.

## கரும்பு டன்னுக்கு ரூ.4,000 வழங்கக் கோரிக்கை

2012-13-ஆம் ஆண்டு கரும்பு அறவை பருவத்துக்கு டன்னுக்கு ரூ.4 ஆயிரம் வயல் விலையாக வழங்க வேண்டும் என முண்டியம்பாக்கம் கரும்பு விவசாயிகள் சங்க பேரவைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முண்டியம்பாக்கம் ராஜஸ்ரீ சர்க்கரை ஆலை யூனிட்-2 மற்றும் செம்மேடு யூனிட்-3 ஆலைகள் கரும்பு விவசாயிகள் சங்கத்தின் பேரவைக் கூட்டம் விழுப்புரத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

÷தலைவர் ஜி. கோவிந்தன் தலைமை வகித்தார். பொருளாளர் ராஜாங்கம் முன்னிலை வகித்தார். வெங்கடசாமி வரவேற்றார். செயலாளர் எம். ஆறுமுகம் ஆண்டறிக்கை வாசித்தார். இதில், விவசாயிகளுக்கு கரும்பு வெட்டுக் கூலி முழுவதையும் ஆலையே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

÷கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு உரங்கள், நுண்ணுயிர் ஊட்டச் சத்துக்கள் அனைத்தையும் ஆலையே முன்பு வழங்கியதைப் போல் கரும்பு கோட்ட பகுதிகளில் உர கிடங்குகள் அமைத்து வழங்க வேண்டும்.

÷அரவைப் பருவம் தொடங்கும் முன் எடை மேடைகளை அரசு அதிகாரிகள் பரிசோதனை செய்யும் போது, விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளும் உடன் இருக்க ஆவன செய்ய வேண்டும்.

÷விவசாயிகள் வெட்டி அனுப்பும் கரும்புக்கு டன்னுக்கு 1 கிலோ சர்க்கரை வீதம் அதிகபட்சமாக இரு மூட்டை சர்க்கரையை அரசு கொள்முதல் விலைக்கே வழங்க வேண்டும். விவசாயிகள் ஆலைக்கு அனுப்பும் கரும்புக்கு 14 நாள்களில் கிரையத் தொகை முழுவதும் பட்டுவாடா செய்ய வேண்டும்.

சொட்டுநீர் பாசனம் அமைத்து கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு ஆலையே ஊக்கத் தொகையாக ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும் உள்ளிட்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெற ஆட்சியர் அழைப்பு

விழுப்புரம் மாவட்டத்தில், முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் திட்டங்கள் குறித்த ஆலோசனைக் கூட்டம் கோலியனூரில் வியாழக்கிழமை நடைபெற்றது.

÷மாவட்ட ஆட்சியர் வா. சம்பத் தலைமை வகித்துப் பேசியது:

முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்ட உதவித் தொகை பெற, உழவர் அடையாள அட்டை பெற்றிருக்க வேண்டும். ஆனால் குறைந்த எண்ணிக்கையில் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராகச் சேர்ந்துள்ளனர்.

÷இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர்களாகச் உள்ளவர்களுக்கு திருமண உதவித் தொகையாக ஆண்களுக்கு ரூ.8 ஆயிரமும், பெண்களுக்கு ரூ.10 ஆயிரமும், முதியோருக்கு ஓய்வூதியமாக 60 வயது பூர்த்தி அடைந்தவர்களுக்கு மாதம்தோறும் ரூ.1,000-மும் வழங்கப்படுகிறது.

÷இது தவிர, பதிவு பெற்ற உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகையாக ஐ.டி.ஐ. விடுதியில் தங்காத மாணவருக்கு ரூ.1,250, மாணவிக்கு ரூ.1,750-ம், விடுதியில் தங்கும் மாணவருக்கு ரூ. 1,450, மாணவிக்கு ரூ.1,950-ம் வழங்கப்படுகிறது.

÷கவின்கலை, ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டயப்படிப்பு விடுதியில் தங்காத மாணவருக்கு ரூ.1,250, மாணவிக்கு ரூ. 1,750-ம், விடுதியில் தங்கும் மாணவருக்கு ரூ. 1,450, மாணவிக்கு ரூ.1,950-ம் வழங்கப்படுகிறது.

÷இளங்கலைப் படிப்பு விடுதியில் தங்காத மாணவருக்கு ரூ. 1,750, மாணவிக்கு ரூ. 2,250-ம், விடுதியில் தங்கும் மாணவருக்கு ரூ.2,000, மாணவிக்கு 2,500-ம், இளங்கலை படிப்பில் கவின் கலை, ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டப்படிப்பு விடுதியில் தங்காத மாணவருக்கு ரூ.1,750, மாணவிக்கு ரூ.2,250-ம் வழங்கப்படுகிறது.

÷விடுதியில் தங்கும் மாணவருக்கு ரூ. 3,250, மாணவிக்கு ரூ.3,750-ம், தொழிற்கல்வி விடுதியில் தங்காத மாணவருக்கு ரூ.2,250, மாணவிக்கு ரூ. 2750-ம், விடுதியில் தங்கும் மாணவருக்கு ரூ. 4,250,மாணவிக்கு ரூ. 4,750-ம் வழங்கப்படுகிறது.

÷முதுகலை விடுதியில் தங்காத மாணவருக்கு ரூ. 4,250, மாணவிக்கு ரூ. 4,750-ம். விடுதியில் தங்கும் மாணவருக்கு ரூ. 6,250, மாணவிக்கு ரூ.6,750-ம் வழங்கப்படுகிறது.

÷இயற்கை மரணமடைந்தால், ரூ.10 ஆயிரமும், ஈமச்சடங்கு நிவாரண உதவித் தொகையாக ரூ.2,500 சேர்ந்து மொத்தம் ரூ.12,500-ம், உறுப்பினர் விபத்தில் மரணமடைந்தால் ரூ.1,02,500-ம்,

÷விபத்து ஏற்பட்டு முடியாத அளவுக்கு இரு கைகள் அல்லது இரு கால்கள் அல்லது ஓரு கை மற்றும் ஓரு கால், கண் பார்வை முழுவதுமாகப் பாதிக்கப்பட்டால் ரூ.1 லட்சமும்,

ஓரு கை, கால் பக்கவாதம் ஏற்பட்டால் ரூ.50 ஆயிரமும், கடுமையான காயங்கள் ஏற்பட்டு கை, கால்கள் இழந்தால் ரூ.20 ஆயிரமும்,

÷18 வயது முதல் 65 வயது வரை உள்ள விவசாய உறுப்பினர்களுக்கு சம்மந்தப்பட்ட துறையின் அரசு மருத்துவ அலுவலர்கள் பரிந்துரை செய்யும் காலம் வரை மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.1,000-ம் வழங்கப்படுகிறது.

÷உழவர் பாதுகாப்புத்திட்ட உதவி பெறுவதுக்கு அந்தந்த கிராம நிர்வாக அலுவலகங்களில் மனுக்களை கொடுத்து உறுப்பினராகச் சேர்ந்து அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளலாம் என்றார்.

இதில், மாவட்டத் திட்ட இயக்குநர் க. முத்து மீனாள், கோலியனூர் ஓன்றியக்குழு தலைவர் விஜயா சுரேஷ் பாபு, கோட்டாட்சியர் என். ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பந்தல் காய்கறி சாகுபடிக்கு மானியம்

பந்தல் காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது என்று, பல்லடம் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் கே.எஸ்.சுகந்தி கூறினார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை: கொடி வகை காய்கறிகளான புடலை, பாகல், பீர்க்கன், சுரைக்காய், அவரை, கோவைக்காய் உள்ளிட்ட காய்கறி பயிர்களின் பரப்பை அதிகரிக்கவும், உற்பத்தியை பெருக்கவும் பந்தல் அமைக்க 50 சதவீதம் மானியம் அரசால் வழங்கப்படுகிறது.

கல் அல்லது சிமெண்ட் தூண்களால் பந்தல் அமைக்க ஹெக்டருக்கு அதிகபட்சமாக ரூ.1 லட்சம் வழங்கப்படுகிறது. வீரிய மற்றும் உயர் விளைச்சல் தரும் காய்கறி ரக விதைகளுக்கு ஹெக்டருக்கு ரூ.55600 மானியம் என ரூ.1 லட்சத்து 55 ஆயிரத்து 600 வழங்கப்படுகிறது.

5 ஏக்கருக்கு கீழ் மொத்த விவசாய பூமி உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகள் இந்தத் திட்டத்தில் பயனடையலாம்.

இந்தத் திட்டத்தின்கீழ் அரசு மானியம் பெற விவசாயிகள் கம்ப்யூட்டர் சிட்டா, அடங்கல், குடும்ப அட்டை நகல், கிராம நிர்வாக அலுவலர் சான்று, புகைப்படம் ஆகிய ஆவணங்களுடன் வட்டாட்சியரின் சிறு, குறு விவசாயி என்ற சான்றிதழுடன் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம்

பல்லடம் வட்டாரத்தில் 1.90 ஹெக்டர் பரப்புக்கு பந்தல் சாகுபடி மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் ரூ. 67.66 லட்சம் உதவித் தொகை

கோபியில் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 67.66 லட்சம் உதவித்தொகையாக வழங்கப்பட்டது.

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவித் தொகை வழங்கும் நிகழ்ச்சி, கோபி கோட்டாட்சியர் கே.பழனிசாமி தலைமையில், கோபி கலைக் கல்லூரி வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சியில், கோபி சட்டப்பேரவை உறுப்பினர் கே.ஏ.செங்கோட்டையன் கலந்துகொண்டு உதவித்தொகையை வழங்கினார்.

கல்லூரியில் ரூ. 40 லட்சம் மதிப்பில் புதிதாகக் கட்டப்பட்ட ஆங்கில கணினி வழி ஆய்வுக் கூடத்தை கே.ஏ.செங்கோட்டையன் திறந்து வைத்தார். முன்னதாக கல்லூரி முதல்வர் ஆர்.செல்லப்பன் வரவேற்றார்.

அந்தியூர் சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.எஸ்.ரமணீதரன், கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் கே.எம்.நடராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்த்துறை பேராசிரியர் ஆர்.ராஜகோபாலன் நன்றி கூறினார்.

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முதியோர் உதவித் தொகையாக 134 பேருக்கு ரூ. 53.60 லட்சம், கல்வி உதவித் தொகையாக 263 மாணவ, மாணவிகளுக்கு ரூ. 5.82 லட்சம் உள்பட, மொத்தம் 458 பேருக்கு ரூ. 67.66 லட்சம் மதிப்பில் உதவித்தொகை வழங்கப்பட்டது.

## ராபி முன்பருவ முனைப்பு இயக்க விழா

செய்யாறு வட்டார வேளாண் அலுவலகம் சார்பில் ராபி முன்பருவ முனைப்பு இயக்க விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

2012-13-ம் வருடத்திய ஆத்மா திட்டத்தின் ஒரு பகுதியாக இவ் விழா, மேல்சீசமங்கலம், விண்ணவாடி, பாராசூர் ஆகிய கிராமங்களில் நடைபெற்றது.

பாராசூர் கிராமத்தில் நடைபெற்ற விழாவுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் கே.தசரதன் தலைமை வகித்தார். வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி, ஆத்மா திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும், விதைநேர்த்தி செய்வது குறித்து விவசாயிகளிடம் விளக்கினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் மா.தமிழ்ச்செல்வி, மண் மாதிரி எடுத்தல் குறித்து பேசினார். தொழில்நுட்ப வல்லுநர்கள் ம.மணிகன்டன், வி.தனஞ்செயன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**காய்ந்த நெற்பயிர்களுடன் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

தமிழகத்துக்கு தண்ணீர் தர மறுக்கும் கர்நாடகத்தைக் கண்டித்து, காய்ந்த பயிர்களைக் கைகளில் ஏந்தி விவசாயிகள் வெள்ளிக்கிழமை திருச்சி ரயில் நிலையம் எதிரே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காவிரியில் தமிழகத்தின் உரிமையை மத்திய அரசும், உச்சநீதிமன்றமும் நிலைநாட்ட வேண்டும். தமிழகத்துக்குரிய தண்ணீரை கர்நாடகம் விடுவிக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுத்து கர்நாடக அரசை கலைக்க வேண்டும் என்பன உள்ளிட்டக் கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர்கள் மாசிலாமணி (மார்க்சிஸ்ட் கம்யூ.), அயிலை சிவசூரியன் (இந்திய கம்யூ.), தோட்டக்கலை விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் புலியூர் நாகராஜன், தமிழக விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் சின்னதுரை உள்ளிட்ட ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

**டிச. 15-க்குள் நெல் பயிருக்கு காப்பீடு செய்ய அழைப்பு**

பெரம்பலூர் மாவட்டத்தில் நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் டிச. 15 ஆம் தேதிக்குள் பயிர் காப்பீடு செய்யலாம் என்றார் வேளாண்மை இணை இயக்குநர் ப. சங்கரலிங்கம்.

இதுகுறித்து அவர் தெரிவித்தாவது:

பெரம்பலூர் மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் 5,152 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

போதுமான மழையில்லாத சூழ்நிலையில், விவசாயிகள் தேசிய வேளாண்மை காப்பீடு திட்டத்தில் காப்பீடு செய்து பயன் பெறலாம்.

வெள்ளம், வறட்சி, பூச்சிகள் மற்றும் நோய்கள் ஆகியவற்றால் ஏற்படும் மகசூல் இழப்புகளுக்கும், மகசூல் குறைபாடு, உத்தரவாத மகசூல், காப்பீடு செய்த தொகை ஆகியவற்றை கணக்கிட்டு காப்பீட்டு தொகை வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியம், வருவாய் கிராமப் பகுதிகளில் மாநில அரசின் விவசாய துறையினால் பயிர் அறுவடை காலத்தில் பயிர் அறுவடை சோதனைகள் நடத்தபடுகிறது.

பருவத்தின் சராசரி மகசூலை கடந்த 3 அல்லது 5 ஆண்டுகால உத்தரவாத மகசூலோடு ஒப்பிடும்போது, நடப்பு பருவத்தின் மகசூல் எவ்வளவு குறைந்து இருக்கிறதோ அந்த விகிதப்படி வட்டாரத்திலுள்ள காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் தொகைக்கேற்ப நஷ்டஈடு வழங்கப்படும்.குத்தகைதாரர் உள்பட அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம்.

நெல் பயிரிட்டு கடன் பெற்ற சிறு, குறு விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு காப்பீட்டுத் தொகையான ரூ. 8,692-க்கு, ரூ. 87-ம் கடன் பெறாத விவசாயிகள் ரூ. 78 கூடுதல் காப்பீட்டுத் தொகையான ரூ. 7,604-க்கும், கடன் பெற்ற சிறு, குறு விவசாயிகள் ரூ. 517, கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் ரூ. 465 செலுத்தி உரிய படிவத்தை வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி கிளையை அணுகி பயன் பெறலாம். இத்திட்டத்தில் சேர ஒவ்வொரு விவசாயியும் அவரது பெயரில் வங்கி சேமிப்பு கணக்கு வைத்திருக்க வேண்டும் என்றார் அவர்.

## திருந்திய நெல் சாகுபடி செய்தவர்களுக்கு மானியம்

மன்னார்குடி வட்டாரத்தில் வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் முறையாக திருந்திய நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டு வருவதாக வேளாண்மை உதவி இயக்குநர் ஆ. உத்திராபதி வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இத் திட்டத்தில் இணைந்துள்ள விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.3 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. இதில் ரூ.ஆயிரம் இடுபொருள்களாகவும், மீதம் தொகை அந்தந்த விவசாயிகளின் வங்கிக் கணக்கில் சேர்க்கப்படும் என்றும், இடுபொருளை அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி பெற்றுக் கொள்ளளாம், என்றும் அவர் தெரிவித்தார்.

## சம்பா நெற்பயிரைக் காப்பாற்ற 12 டி.எம்.சி. தண்ணீர் போதாது : ராமதாஸ்



சம்பா பயிரைக் காப்பாற்ற 12 டிஎம்சி தண்ணீர் போதாது என்று பாமக நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுப்படி தில்லியில் நேற்று கூடிய காவிரி கண்காணிப்புக் குழு, காவிரி பாசன மாவட்டங்களில் கருகி வரும் சம்பா நெற்பயிர்களை காப்பாற்றுவதற்காக தமிழகத்திற்கு டிசம்பர் மாதத்தில் 12 டி.எம்.சி. தண்ணீரை திறந்து விடும்படி கர்நாடக அரசுக்கு ஆணையிட்டிருக்கிறது. காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு இம்மாத இறுதிக்குள் மத்திய அரசிதழில் வெளியிடப்படும் என்றும் அக்குழு அறிவித்திருக்கிறது.

காவிரி பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்ட நடுவர் மன்றம் அதன் இறுதித் தீர்ப்பை கடந்த 2007ஆம் ஆண்டிலேயே வழங்கியபோதிலும், அத்தீர்ப்பு கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக அரசிதழில் வெளியிடப்படாமல் கிடப்பில் போடப்பட்டிருந்தது. இதற்காக பல்வேறு சாக்குபோக்குகள் கூறப்பட்டன. தற்போது உச்சநீதிமன்றம் கண்டித்தபிறகு, வேறுவழியின்றி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட மத்திய அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. இது தாமதமாக எடுக்கப்பட்ட முடிவு என்ற போதிலும் வரவேற்கத்தக்க முடிவு ஆகும். நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பில் கூறப்படுள்ளவாறு காவிரி மேலாண்மை வாரியம், காவிரி நீர் ஒழுங்கு முறை குழு ஆகியவை அமைக்கப்பட்டு, அவை முழு அதிகாரத்துடன் செயல்பட அனுமதிக்கப்பட்டால், காவிரி நீருக்காக கர்நாடகத்திடம் கையேந்தி நிற்கும் அவல நிலை தமிழகத்திற்கு இனி ஏற்படாது.

அதே நேரத்தில், சம்பா பயிரை காப்பாற்றுவதற்காக காவிரி கண்காணிப்புக் குழு ஒதுக்கியுள்ள 12 டி.எம்.சி தண்ணீர் போதுமானதல்ல. தமிழகத்தில் சம்பா பயிரை காப்பாற்ற குறைந்தது 60 டி.எம்.சி தண்ணீர் தேவை. டிசம்பர் மாதத்தில் குறைந்தது 30 டி.எம்.சியாவது திறந்து விடபட்டால் தான் பயிர்களை ஓரளவாவது காப்பாற்ற முடியும். உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டவாறு வினாடிக்கு 10 ஆயிரம் டி.எம்.சி வீதம் தொடர்ந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டால் கூட இம்மாதத்தில் சுமார் 25 டி.எம்.சி தண்ணீர் கிடைக்க வாய்ப்புள்ளது. ஆனால், 12 டி.எம்.சி மட்டும் தண்ணீர் திறந்து விடும்படி கர்நாடகத்திற்கு கண்காணிப்புக் குழு ஆணையிட்டிருப்பது தமிழக விவசாயிகளுக்கு இழைக்கப்பட்ட மிகப்பெரிய துரோகம் ஆகும்.

ஆனால், இந்தத் தீர்ப்பைக்கூட செயல்படுத்த முடியாது என கர்நாடக முதலமைச்சர் ஜெகதீஷ் ஷெட்டர் கூறியிருப்பது கடுமையாக கண்டிக்கத்தக்கது. காவிரி வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது, இந்த விசயத்தில் கண்காணிப்புக்குழுவின் ஆணைக்குத் தான் கட்டுப்படுவோம் என்று கர்நாடக அரசு கூறியது. ஆனால், இப்போது கண்காணிப்புக்குழுவின் தீர்ப்பை ஏற்க முடியாது என்றும், இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப் போவதாகவும் கர்நாடக முதல்வர் கூறுவது ஏமாற்றும் செயலாகும்.

காவிரியில் தண்ணீர் வராததால் பாசன மாவட்டங்களில் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகிறது.

பயிர்கள் கருகி வைக்கோலாகி வருகின்றன. கருகிய பயிர்களைப் பார்த்த அதிர்ச்சியில் சிதம்பரம் பகுதியைச் சேர்ந்த சக்கரவர்த்தி என்ற விவசாயி மாரடைப்பால் மரணமடைந்திருக்கிறார். இதே நிலை தொடர்ந்தால் காவிரி பாசன மாவட்டங்களில் எலிக்கறி சாப்பிடும் அவலநிலை மீண்டும் ஏற்படக்கூடும். இதைக் கருத்தில் கொண்டு தமிழகத்தில் வாடும் நெற்பயிர்களைக் காப்பாற்ற உடனடியாக 30 டி.எம்.சி தண்ணீரை திறந்து விடும்படி கர்நாடக அரசுக்கு மத்திய அரசு ஆணையிட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் என்று கூறியுள்ளார்.

**பயிருக்கு நீர் இல்லை : விவசாயி தூக்கிட்டுத் தற்கொலை**

வயலில் நீர் இல்லாமல் பயிர்கள் வாடுவதைக் கண்டு மனம் நொந்த விவசாயி தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

திருத்துறைப்பூண்டி அருகே ஆண்டாங்கரை கிராமத்தைச் சேர்ந்தவர் அப்துல் ரஹீம். இன்று தனது வயலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பியவர், தண்ணீர் இல்லாமல் நிலம் காய்ந்து கிடந்ததால், மனம் நொந்து தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார். இதுகுறித்து போலீஸார் விசாரணை மேற்கொண்டனர்.

**விவசாயிகளுக்கு நெற்பயிர் காப்பீடு குறித்து விழிப்புணர்வு பிரசாரம்**

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர், கடலாடி உள்ளிட்ட 6 தாலுகாக்களில் பயிர் காப்பீடு குறித்த விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்வது குறித்டு இன்று தகவல் தெரிவிக்கப்பட்டது.

ராமநாதபும் மாவட்டத்தில் நெற்பயிர் காப்பீடு வழங்குவது தொடர்பாக இரண்டாவது கட்ட பிரசாரத் திட்டம் டிச.13, 14ல் நடைபெறும்.

சிறு மற்றும் குறு விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு 78 ரூபாய் பிரீமியம் கட்டினால் பேரழிவுக் காலங்களில் காப்பீட்டுத் தொகையாக ரூ.8692 ரூபாய் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அதுபோல், பெரிய விவசாயி என்றால் 87 ரூபாய் பிரீமியம் கட்ட வேண்டும். அவர்களுக்கு அதே தொகை இழப்பீடாக வழங்கப்படும். கடன் பெறுவோர் ரூ.87 பிரீமியம் கட்டினால் இதே தொகைக்கு காப்பீடு கிடைக்கும்.

இதற்கான கடைசித் தேதி டிச.15. அதற்குள் கூட்டுறவு விவசாய வங்கிகளுக்குச் சென்று காப்பீடு தொடர்பான விண்ணப்பங்களைப் பெற்று நிரப்பிக் கொடுக்க வேண்டும் என்று இந்தப் பிரசாரக் குழுவினர் தெரிவித்தனர்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

08.12.2012 A.M

## கலெக்டர் தலைமையில் மூங்கில் சாகுபடி குறித்த கருத்தரங்கு

திருவள்ளூர், : தோட்டக்கலை துறை சார்பில், திருவள்ளூர் டிஆர்எஸ் திருமண மண்டபத்தில் மூங்கில் சாகுபடி குறித்த கருத்தரங்கு நேற்று நடந்தது. கலெக்டர் வீரராகவராவ் தலைமை வகித்து கருத்தரங்கை தொடங்கி வைத்தார். தோட்டக்கலை துணை இயக்குநர் ரஞ்சன்பால் வரவேற்றார். கலெக்டர் பேசுகையில், திருவள்ளூர் மாவட்டத்தில் மூங்கில் சாகுபடி குறைவாக உள்ளது. மூங்கில் உற்பத்தி குறித்து தெரிந்துகொள்ள நிறுவனங்கள் முன்வந்துள்ளன. மூங்கில் சாகுபடியில் பல ரகங்கள் உள்ளன. நில தன்மைக்கேற்ப சாகுபடி செய்யவேண்டும். நன்கு வளர்ச்சியடைந்து பயன்தரும் ரகங்களை பயிரிட்டு விவசாயிகள் பயன்பெற வேண்டும்‘ என்றார்.

வேளாண்மை இணை இயக்குநர் சீனிவாசலு, பயிற்சி கலெக்டர் அனிஸ்சேகர், தோட்டக்கலை துறை, வேளாண்மை துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வணிக வரித் துறை, வனத்துறை, வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் கலந்து கொண்டு மூங்கில் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர்.

## நன்னீர் மீன் வளர்ப்பு உணவு தயாரிப்பு பயிற்சி 12ம் தேதி துவங்குகிறது

தஞ்சை, : இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சார்பில் 6 நாட்கள் நன்னீர் மீன்வளர்ப்பு மற்றும் மீனுக்கு உணவு தயாரித்தல் பயிற்சி வழங்கப்பட உள்ளது.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிராமிய சுயவேலைவாய்ப்பு பயிற்சி மையத்தில் நபார்டு நிதி உதவியுடன் நடைபெறும் பயிற்சி வரும் 12ம் தேதி துவங்குகிறது. பயிற்சி காலத்தில் மதிய உணவு, தேவையான பயிற்சி பொருட்கள் வழங்கப்பட உள்ளது.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த மீன் வளர்ப்பதற்கு ஆர்வமுள்ள தண்ணீர் மற்றும் நில வசதியுள்ள விவசாயிகளுக்கு பயிற்சியில் கலந்துகொள்ள முன்னுரிமை வழங்கப்படும். பயிற்சிபெறும் அனைவருக்கும் வங்கி சான்றிதழ் வழங்கப்படும்.

தினமும் பயிற்சி காலை 10 முதல் மாலை 5 மணி வரை நடைபெறும். இதில் சேர விரும்புவோர் வரும் 12ம் தேதி காலை 9.30 மணிக்கு ஐஓபி பயிற்சி மையத்தில் நடைபெறும் நேர்முக தேர்வில் கலந்துகொள்ள வேண்டும்.

கல்வி சான்றிதழ், ரேஷன் கார்டு, 2 ஸ்டாம்ப் சைஸ் போட்டோ ஆகியவை நேர்முக தேர்வுக்கு கொண்டுவர வேண்டும். மேலும் விவரங்களுக்கு ஐஓபி கிராமிய சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையம், எண்.4, பக்கிரிசாமி வீதி, ஈஸ்வரி நகர், மருத்துவக்கல்லூரி சாலை, தஞ்சை-4 மற்றும் 04362-242377 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளலாம். இத்தகவலை பயிற்சி மைய இயக்குனர் வெற்றிச்செல்வன் தெரிவித்துள்ளார்.

காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை அரசிதழில் வெளியிட வேண்டும்

**விவசாயிகளுக்கு பயிற்சி**

சின்னமனூர், : சின்னமனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மாவட்ட வேளாண்துறை சா ர்பில் ஐசோபாம்-மக்காச்சோளம் குறித்த விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது. வேளாண் இண இயக்குனர் சுந்தரம் தலைமை வகித்தார். நகராட்சி துணைத்தலைவர் வேதநாயகம், சின்னமனூர் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் பாண்டியராஜ் முன்னிலை வகித்தனர். வேளாண் அலுவலர் இளம்பூ ரணர் வரவேற்றார்.

கிணற்று பாசனம் மற்றும் மானாவாரி நிலங்களில் மக்காளச்சோளம் பயிர் செய்துள்ள விவசாயிகளு க்கு உழவியல் முறைகள், உரமிடும் முறைகள், பயிர் பாதுகாத்திடும் முறை, வணிக ரீதியான வாய்ப்புகள் குறித்து விளக்கப்பட்டது. மக்காச்சோள பயிருக்கான மானிய திட்டங்கள் குறித்தும் எடுத்துரைக்கப் பட்டது.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் முத்தையா, சின்னமனூர் ஊராட்சி ஒன்றியக்குழு துணை த்தலைவர் பெரியமொக்கையன், சின்னமனூர் வேளாண் உதவி இயக்குனர் அழகுநாகேந்திரன், காட்சி புரம் வேளாண் அறிவியல் மையம் மாரிமுத்து, பென்னிகுக் கரும்பு விவசாயிகள் சங்க தலைவர் தனுஷ்கோடி, வேளாண் உதவி அலுவர்கள் பன்னீர்செல்வம், ஜானகிராமன் கலந்து கொண்டனர். வேளாண் மை துணை அலுவலர் புகழேந்தி நன்றி கூறினார்.

**சொட்டு நீர்பாசன விவசாயிகளுக்கு ஆலை நிர்வாகம் ஊக்கதொகையாக ரூ10 ஆயிரம் வழங்க வேண்டும்**

விழுப்புரம், : முண்டியம்பாக்கம் ராஜஸ்ரீ சர்க்கரை ஆலை யூனிட் 2 மற்றும் செஞ்சி, செம்மேடு யூனிட் 3 ஆலை கரும்பு விவசாயிகள் சங்க பேரவை கூட்டம் விழுப்புரத்தில் நடந்தது. தலைவர் கோவிந்தன் தலைமை தாங்கினார். பொருளாளர் ராஜாங்கம் முன்னிலை வகித்தார். வெங்கடசாமி வரவேற்றார்.

ஆண்டு அறிக்கையை செயலாளர் ஆறுமுகம் வாசித்தார். கூட்டத்தில் 2012-13ம் ஆண்டு அறவை

பருவத்திற்கு கரும்பு டன் ஒன்றுக்கு வயல் விலையாக ரூ.4,000 வழங்க வேண்டும், கரும்பு வெட்டும் கூலியை ஆலை நிர்வாகமே ஏற்க வேண்டும், உரங்கள் மற்றும் நுண்ணுயிர் ஊட்டச்சத்துக்களை ஆலை நிர்வாகம் முன்பு வழங்கியதுபோல் கரும்பு கோட்ட பகுதிகளில் உர கிடங்குகள் அமைத்து வழங்க வேண்டும், விவசாயிகள் மற்றும் சங்க பிரதிநிதிகள் முன்னிலையில் அரவை பருவம் தொடங்குவதற்கு முன்பு எடை மேடைகளை அரசு அதிகாரிகள் பரிசோதனை செய்ய வேண்டும், விவசாயிகள் வெட்டி அனுப்புகின்ற கரும்பு டன் ஒன்றுக்கு 1 கிலோ சர்க்கரை வீதம் அதிகபட்சமாக 2 மூட்டை சர்க்கரையை அரசாங்க கொள்முதல் விலைக்கு வழங்க வேண்டும், ஆலைக்கு அனுப்புகின்ற கரும்புக்கு 14 நாட்களில் கிரைய தொகையை முழுவதுமாக பட்டுவாடா செய்ய வேண்டும், கரும்பு வெட்டு உத்தரவு விவசாயிகளுக்கு 12 மாதங்களில் கிடைக்க வேண்டும், சொட்டு நீர்பாசனம் அமைத்து கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு ஊக்க தொகையாக ஆலை நிர்வாகம் ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில் துணை தலைவர்கள் ராஜாராமன், செல்வராஜ், ரங்கநாதன், துணை செயலாளர்கள் மண்ணாங்கட்டி, பரமசிவம், வழக்கறிஞர் பாண்டியன், கலிவரதன், விஜயகுமார், முத்துநாராயணன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**கரும்புக்கு கூடுதல் விலை நிர்ணயிக்க வேண்டும் விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்**

திருச்சி, : கரும்புக்கு கூடுதல் விலை நிர்ணயிக்க வேண்டும் என்று விவசாயி கள் சங்கம் வலியுறுத்தி உள் ளது.

திருச்சியில் 20 ஆயிரம் ஏக்கர், பெரம்பலூரில் 2 ஆயிரம், புதுக்கோட்டை யில் 5 ஆயிரம், கரூரில் 5 ஆயிரம், திருவாரூரில் 5 ஆயிரம், மதுரை, சிவகங்கையில் 5 ஆயிரம், திண்டுக் கல், தேனி, திருநெல்வேலி மாவட்டங்களில் 30 ஆயி ரம், காஞ்சிபுரத்தில் 15 ஆயிரம், திருவள்ளூரில் 20 ஆயிரம், வேலூரில் 50 ஆயி ரம், கடலூரில் 50 ஆயிரம், விழுப்புரத்தில் 1 லட்சம், திருவண்ணாமலையில் 50 ஆயிரம், சேலத்தில் 10ஆயி ரம் ஏக்கர் என 3 லட்சத்து 67 ஆயிரம் ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள் ளது.

தற்போது விவசாயத்திற்கு மும்முனை மின்சாரம் 2 மணி நேரம் கூட வழங்கப்படாததால் டீசல் என் ஜின் வைத்து கரும்பு சாகு படி செய்யப்படுகிறது. இதற்கிடையில் காவிரியி லும் தண்ணீர் வராததால் கரும்பு விவசாயிகள் கடும் விரக்தியில் இருந்து வருகின்றனர். இதனால் கரும்பு டன்னுக்கு ரூ.3,500 என விலை அறிவிக்க வேண்டும் என அனைத்து விவசாயி கள் சங்க

தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

இதுகுறித்து தமி ழக விவசாயிகள் சங்க மாநில செய லாளர் ராஜாசிதம்பரம் கூறு கையில், வேளாண் விலை பொருள் விலை நிர்ணய ஆணையம் கண்துடைப் பான அறிவிப்பை கட்டுப்படியாகாத விலையை பொருளாதார குழு நிர்பந்தத்தால் நியாயமான மற் றும் கட்டுபடி யான விலை யாக (எப்ஆர்பி) விலையை அறிவிக்கின்றது. அதிகாரம் கொண்ட அரசியல் தலை யீடு இல்லாத ஆணையமாக செயல்படுத்தி 2012-2013 அரவை பருவத்திற்கு நியா யம் மற்றும் கட்டுபடியான விலையாக (எப்ஆர்பி) மத் திய அரசு கரும்புக்கு டன் னுக்கு ரூ.1,700 அறிவித்ததை விட 300 சதவீத உரவிலை உயர்வு சாகுபடி செலவு அதிகரிப்பை கணக்கிட்டு டன்னுக்கு ரூ.3,500 என விலையை உயர்த்தி அறி விக்க மத்திய அரசை தமி ழக அரசு வலியுறுத்த வேண்டும்.

மத்திய அரசு அறிவிக்கும் எப்ஆர்பி விலையு டன், ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள மாநில அரசு பரிந்துரை விலையை (எஸ் ஏபி) அறிவிக்க வேண்டும். 2012-2013 அரவை பருவத்திற்கு டன் கரும்புக்கு மத் திய அரசு அறிவித்த எப் ஆர்பி விலையை ரூ.2,350ல் இருந்து ரூ.3,500ஆக உயர்த்த, சர்க்கரை ஆலை அதிபர்கள், விவசாய சங்க தலைவர்கள், அரசு அதிகாரிகள் ஆகியோரை கொண்ட முத்தரப்பு கூட் டம் கூட்டி, தமிழக அரசு பரிந்துரை விலையை அறி விக்க வேண் டும் என் றார்.

பாரதீய கிசான் சங்க மாநில துணை செயலாளர் அய்யாக்கண்ணு கூறுகை யில், யானை பசி க்கு சோளப்பொரியை போட் டது போல எல்லா பொருட்களுக்கும் அதிகபட்ச விற் பனை விலையை அறிவிக் கும் மத்திய அரசு, விவசாயி கள் உற்பத்தி செய் யும் கரும்புக்கு மட்டும் குறைந்தபட்ச ஆதரவு விலை யென்று ஒரு டன் கரும்புக்கு ரூ.1,450ல் இருந்து ரூ.1,700 அறிவித்து கரும்பு விவசாயிகள் வயிற் றில் அடித்துள்ளது.

இந்நிலையில் 50 கிலோ பொட்டாஷ் உரத்தை ரூ.231ல் இருந்து ரூ.900க்கும், 50 கிலோ டிஏபி உரத்தை ரூ.486ல் இருந்து ரூ.1,400க்கு உயர்த்தியுள்ளது.

மத்திய அரசு கரும்புக்கு உரிய விலை கொடுக்காமல் ஏமாற்றியது போல தமிழக அரசும் கடந்த ஆண்டே கரும்புக்கு ஒரு டன்னுக்கு ரூ.2,500 தருவதாக கூறிவிட்டு தமி ழக அரசின் ஆதரவு விலை யாக ரூ.2,100ல் இருந்து ரூ.2,350 ஆக உயர்த்தியிருப்பதால் தமிழக விவசாயிகளுக்கு எந்த பயனுமில்லை. கடனி லேயே பிறந்து, கடனிலேயே வாழ்ந்து கடனிலேயே சாகும் விவசாயிகளை காப்பாற்றாத மத்திய, மாநில அரசுகளை கண்டிப்பது மட்டுமல்லாமல் ஒரு டன் கரும்புக்கு ரூ.5 ஆயிரம் தரவேண் டும் என் றார்.

தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயி கள் சங்கம் மாநில தலைவர் விசுவநாதன்

கூறுகையில், 2010ல் இருந்து இன்று வரை கரும்பு டன்னுக்கு ரூ.3,500 வேண்டும் என கரும்பு விவசாயிகள் கோரிக்கை வைத்து போராடி வருகின்றனர்.

ஆனால் கரும்பு விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை இன்று வரை தமி ழக அரசாலும் ரூ.100, ரூ.250 என மத்திய அரசு உயர்த்திய விலையை கூட்டி அறிவித்து வருகிறது. தமிழகத்தில் விவசாயிகளின் கூலி, விவசாய இடு பொருட்களான உரம், மருந்து இவைகள் 25 சதவீதத்தில் இருந்து 30 சதவீதம் வரை கூடியிருக்கிறது. கரும்புக்கு 30 சதவீதம் விலை கூடினால் ரூ.3,500 என நியாயமான விலை தமிழக அரசு அறிவிக்க வேண்டும். மேலும் காவிரியில் தண்ணீர் இல்லை. விவசாயத்திற்கு மும்முனை மின்சாரம் இல்லை.

இந்த சூழ்நிலையில் டீசன் இன்ஜின் வைத்து கரும்புக்கு தண்ணீர் பாய்ச்சி கரும்பு பயிர் செய்து ஏக்கருக்கு 40 டன் வெட்டுவது கஷ்டம். தேர்தல் அறிக் கையை நம்பி கரும்பு விவசாயம் செய்துள்ள விவசாயிகளுக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என் றார்.

தனியார் ஆலைகளுக்கு

ரங்கராஜன் கமிட்டி சாதகம்?

நாடு முழுவதும் உள்ள தனியார், சர்க்கரை ஆலைகள் இலக்கை விட கூடுதலாக உற்பத்தி செய்யும் நிலையில் ஊழியர்கள், நிதி ஆதாரம், நிர்வாக திறமையின்மை போதுமான தொழில்நுட்ப வசதியின்மை என பல்வேறு பிரச்னைகளில் சிக்கி இயங்காமல் இருக்கும் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகள் திறம்பட இயங்க வழி என்ன என்றபோது, இவைகளை தீர்க்க ரங்கராஜன் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டது. ஆனால், இந்த கமிட்டியின் அறிக்கை விவசாயிகளை வஞ்சித்து தனியார் ஆலைகளுக்கு சாதகமாக இருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

## கரு ம்பு விவசாயிகள் சங்க கூட்டம்

திருப்புவனம்,: திருப்பாச்சேத்தியில் கரும்பு விவசாயிகள் சங்க கூட்டம் தலைவர் தினகரன் தலைமையில் நடந்தது.

செயலாளர் முனீஸ்வரன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் கடந்தாண்டு போலவே இந்தாண்டும் டிசம்பர் 12ம் தேதி சக்தி சர்க்கரை ஆலையில் அரவையை துவக்க வேண்டும், லோன் படிவம் வாங்கும் போது கெமிக்கல் வாங்கச் சொல்லி நிர்வாகம் வற்புறுத்த கூடாது, தோல்வியடைந்த சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க ஆலை நிர்வாகம் வற்புறுத்த கூடாது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் தூதை சுப்ரமணியன், சுல்லங்குடி ராமலிங்கம்,

சர்வேஸ்வரன், மருது, மழவை அழகேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். பொருளாளர் மருது நன்றி கூறினார்.

இன்றைய வேளாண் செய்திகள்
08.12.2012 A.M

**20 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பாசனம் பெறும் வகையில் கருமந்துறையில் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க புதிய திட்டம் விவசாயிகள் கோரிக்கை**

கருமந்துறையில் இருந்து வீணாகும் தண்ணீரை புதியவாய்க்கால் வெட்டி, கரியகோவில் அணைக்கு கூடுதல் நீர்வரத்தை பெருக்கி 20 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பயன்பெற திட்டம் உருவாக்கிட விவசாயிகள், ஆயக்கட்டு விவசாயிகள் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கருமந்துறை அணை

சேலம் மாவட்டம் கருமந்துறையில் இருந்து வரும் தண்ணீர் மலைஅடிவாரத்தில் உள்ள கரியகோவில் அணையில் சேமித்து வைக்கப்படுகிறது. மீதம் உள்ள நீர் மலையாளபட்டி, தும்பல், இடையபட்டி வழியாக கரியகோவில், தும்பல், இடையப்பட்டி வழியாக கல்லேரிபட்டி ஏரி, அபிநவம் ஏரி, பெத்தநாயக்கன்பாளையம் ஏரி, சின்னமசமுத்திரம் ஏரி, வர்மசமுத்திரம் ஏரிக்கு செல்கிறது. இதன் மூலம் இந்த பகுதியில் உள்ள நிலங்கள் ஏரிபாசனம் மற்றும் வசிஷ்டநதி மூலம் பாசனவசதி பெறுகிறது. மேலும் ஆற்றங்கரையோரம் உள்ள விவசாயிகளும் பயன்பெறுகின்றனர். 10 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் செழிப்படைந்து வருகின்றது.

இதைத்தொடர்ந்து ஆத்தூர் வழியாக வரும் வசிஷ்டநதி கரையோர விவசாயிகளும் பயன்பெற்று வருகின்றனர். ஆத்தூர் ஏரி, அய்யனார்கோவில் ஏரி, கல்லாநத்தம் ஏரி, லட்சுமணசமுத்திரம் ஏரி வழியாக இந்த பகுதி மற்றும் ஆத்தூர் சுற்றுவட்டாரபகுதியில் உள்ள சுமார் 8 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயன் பெறுகின்றன. மேலும் இந்த பகுதியில் உள்ள கிணறுகள், ஆழ்துளைகிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்து காணப்பட வகை செய்கிறது.

குடிநீர்வசதி

இந்த தண்ணீர் ஆத்தூரில் இருந்து தலைவாசல், பெரியேரி வழியாக சென்று விழுப்புரம் மாவட்டம் திட்டக்குடி சென்று அடைகின்றது. ஆத்தூரில் இருந்து காட்டுகோட்டை, மணிவிழுந்தான், தலைவாசல், தேவியாகுறிச்சி வழியில் உள்ள ஏரிகளும், அந்த பகுதிகளில் உள்ள சுமார் 4 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களும் பயன் அடைகின்றது.

தற்போது மிகவும் தண்ணீர் பற்றாக்குறை உள்ள நிலையில் சேலம் கிழக்கு மாவட்டத்தில் உள்ள விவசாய நிலங்கள் மற்றும் குடிநீர்தேவையை போக்க புதிய திட்டம் அமைக்க விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

கருமந்துறைமலையில் கடும் வறட்சியிலும் வற்றாத பகுடுபட்டுமலையில் ஆறு உருவாகி கத்தியான்வலவு வழியாக கடும்வறட்சிகளிலும் நீர்வற்றாத மிகப்பெரிய காட்டாறு உள்ளது. இந்த ஆறு வெள்ளிமலை வழியாக விழுப்புரம் மாவட்டம் சென்று அடைகின்றது. இந்த ஆற்றுநீரை கத்தியான்வலவு பகுதியில் இருந்து ராக்கோடு வழியாக சுமார் 350 மீட்டர் வாய்க்கால் வெட்டி, அதனை கரியகோவில் அணைக்கு வரும் நீர்வாய்காலில் இணைத்து விட்டால், மேற்கண்ட ஆத்தூர், பெத்தநாயக்கன்பாளையம், தலைவாசல் வழியாக சுமார் 20 ஆயிரம் ஏக்கர் விவசாயம் நிலம் பயன்பெறும். மேலும் இதன் மூலம் ஆத்தூர் நகரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய முடியும். வருடந்தோறும் வசிஷ்டநதியிலும் தண்ணீர் ஓடும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

பெத்தநாயக்கன்பாளையம் யூனியனில் கருமந்துறை, கரியகோவில் அணை பகுதி அமைந்துள்ளதால் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று சேர்மன் இளங்கோவன் தலைமையில் மாவட்ட கவுன்சிலர்கள் தங்கமணி, முருகேசன், ரஞ்சித், ஒன்றிய செயலாளர் ரமேஷ், ஆணையாளர் விஜயகுமார், வட்டார வளர்ச்சி அலுவலர் தனமணி, துணை சேர்மன் சித்ராகுமார் உள்பட பலர் உடன் சென்று அந்த ஆற்றை பார்வையிட்டனர். இது குறித்து சேர்மன் இளங்கோவன் கூறுகையில், ''சேலம் கிழக்கு மாவட்ட விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று இந்த திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இதுபற்றி தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் இடைப்பாடி கே.பழனிசாமியிடம் ஆகியோரிடம் கூறி, கரியகோவில் அணைநீர் ஆதாரத்தை பெருக்கும் திட்டத்தை செயல்படுத்த முயற்சி செய்து விவசாயிகள் மற்றும் குடிநீர் தேவைக்கு நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றார்.